தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்

Vol: 02 | Issue: 131 | 4 Pages | 9.12.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 131 | 4 பக்கங்கள் | 9.12.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே உடம்போ டுயிரிடை நட்பு

விளக்கம்: உடம்போடு உயிர்க்கு உள்ள உறவு, தான் இருந்த கூடு தனியே இருக்க அதை விட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது.

கொடி நாள்: பெருமளவில் நிதி வழங்கி நம் நன்றியை காணிக்கையாக்குவோம்: முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச.9

இந்திய முப்படை வீரர்களின் அரும்பணிகளையும், தியாகத்தையும் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 7ந் தேதி படைவீரர் கொடி நாளாக கடைபிடிக்கப்படுகிறது. இந்த நிலையில் கொடி நாளையொட்டி சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே விடம் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடி நாள் நிதிக்கு நன்கொடை வழங்கினார். கொடி நாளை முன்னிட்டு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தம் பெற்றோரையும், தாம் பெற்றெடுத்த செல்வங்களையும், உற்ற மனைவியையும், உறவினர்களையும் பிரிந்து, பிறந்த நாட்டின் பெருமை காத்திடும் முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தும் திருநாள், "படைவீரர் கொடி நாள்". இக்கொடி நாள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

நாட்டின் எல்லைகளையும், நமது சுதந்திரத்தையும் காத்திடும் பணியில் எண்ணற்ற படைவீரர்கள் தங்கள் இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரம் வீரர்கள் தங்கள் உடல் உறுப்புகளை இழந்திருக்கிறார்கள். ஏனையோர் எப்பொழுது எத்தகைய துன்பம் வந்தாலும், சிறிதும் அஞ்சாமல் தங்கள் கடமையே பெரிதென்று எண்ணிப் பணியாற்றுகிறார்கள்.

இவர்கள் தனி மனிதர்கள் அல்ல.

தங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றும் பொறுப்பு ராணுவ வீரர்களுக்கு உண்டு. அந்தப் பொறுப்பினை நாட்டு மக்கள் தங்கள் கடமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ராணுவவீரர்களுடைய குடும்ப நல்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும், பொருள் உதவியும், பிற உதவிகளும் செய்திட வேண்டும் என்பதை நாடு முழுவதும் கொண்டாடப்படும் இந்தக் கொடி நாள் நம் அனைவருக்கும் நினைவூட்டுகிறது.

பலநலத்திட்டங்களை வழங்கி, முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் குடும்பத்தினர் நலன் காப்பதில், நமது மாநிலம் முன்னோடியாகத் திகழ்கிறது. எனவே. இவ்வாண்டு கொடி நாளிலும் பெருமளவில் நிதி வழங்கி, முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நம் நன்றியையும் நல்வணக்கத்தையும் காணிக்கையாக்குவோம்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு அறிவித்துள்ள 944 கோடி ரூபாய் போதுமானதாக இருக்காது: துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு

வேலூர், டிச.9

பெஞ்சல் புயல் காரணமாக அதிக கனமழை பெய்ததால் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, தர்மபுரி, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதோடு பெரும் சேதத்தையும் உண்டாக்கியது. இந்நிலையில் புயல் பாதிப்புகளுக்காக இடைக்கால நிவாரணமாக ரூ.2 ஆயிரம் கோடியை உடனடியாக விடுவிக்குமாறு பிரதமர் மோடிக்கு, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதி இருந்தார். மேலும் மத்திய அரசின் பல்துறை குழுவை அனுப்பி சேத விவரங்களை கணக்கிட வேண்டும் என்றும் அதில் கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் தமிழக வெள்ள சேதங்களை நேரில் பார்வையிட மத்தியக்குழுவினர் நேற்று மாலை சென்னை வந்தநிலையில், தலைமைச்செயலகத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசினர். அப்போது முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழகத்தில் வெள்ளப்பாதிப்பால் ஏற்பட்ட பேரழிவிற்கு தற்காலிக மற்றும் நிரந்தர மறு சீரமைப்பு பணிகளுக்கு ரூ.6,675 கோடி நிதி வழங்க வேண்டும் என்று கூறி அதற்கான முழு விவரங்கள் அடங்கிய கோரிக்கை மனுவை அவர்களிடம் அளித்தார். மேலும், அவர் மத்தியக்குழுவிடம் தமிழ் நாட்டிற்கு தேவையான நிவாரணப் பணிகள், நிரந்தர மற்றும் தற்காலிக மறு சீரமைப்பு பணிகளுக்காக நிதியினை பெற்றுத்தர விரைந்து பரிந்துரை செய்திட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் இந்த மத்தியக் குழுவினர் இன்றும் (சனிக்கிழமை), நாளையும் (ஞாயிற்றுக்கிழமை) தமிழகத்தில் வெள்ள பாதிப்பு ஏற்பட்ட விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சென்று ஆய்வை தொடங்க உள்ளனர்.

இதனிடையே தமிழ் நாட்டுக்கு 944 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய மத்திய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

மேலும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு மத்திய குழுவினர் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், விரிவான ஆய்வுக்குப் பிறகு தேசிய பேரிடர் நிதியிலிருந்து கூடுதல் நிதி உதவி வழங்கப்படும் என்றும் மத்திய அரசு உறுதியளித்திருந்தது.

இந்நிலையில், புயல் நிவாரண நிதியாக மத்திய அரசு 944 கோடி ரூபாயை அளித்திருப்பது போதுமானதாக இருக்காது என துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், "புயல் நிவாரணமாக முதல் அமைச்சர் ரூ.2 ஆயிரம் கோடி கேட்டிருந்தார். ஆனால், மத்திய அரசு 944 கோடி ரூபாய் கொடுத்துள்ளது. இது நிச்சயம் போதுமானதாக இருக்காது" என்று உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

முன்னதாக வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் குறித்து ஆய்வுக் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட துணை முதல்அமைச்சர் உதயநிதி திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், ஆர். காந்தி, வேலூர் மாவட்ட கலெக்டர் சுப்புலட்சுமி, ராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் சந்திரகலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் தலித்துகள் துயரமான நிலையில் உள்ளனர்: கவர்னர் ஆர்.என்.ரவி பேச்சு

சென்னை, டிச.9

அம்பேத்கரின் 68வது நினைவு தின நிகழ்ச்சி சென்னை கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகையில் நேற்று காலை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முக்கிய விருந்தினராக கவர்னர் ஆர்.என்.ரவி கலந்துகொண்டு, தேசத்துக்கு பங்களிப்பு வழங்கி வரும் சிறந்த பிரமுகர்களுக்கு விருதுகளை வழங்கினார். அந்த வகையில், நடிகர் பிரேம்ஜி, கிராமிய பாடல் தம்பதி செந்தில் ராஜலட்சுமி உள்ளிட்டோர் கவர்னர் ஆர்.என்.ரவியிடம் இருந்து விருதுகளை பெற்றனர். பின்னர் நிகழ்ச்சியில் பேசிய கவர்னர் ஆர்.என்.ரவி கூறியதாவது:

விரிவான, வலுவான மற்றும் உறுதியான அரசியலமைப்பை வடிவமைப்பதிலும், நீதி சார்ந்த மற்றும் சமத்துவ இந்தியாவுக்கான அரசியலமைப்பு அடித்தளத்தை அமைப்பதிலும் அம்பேத்கர் முக்கிய பங்காற்றினார். தலித் சமுதாயத்துக்கு எதிரான குற்றங்கள் கடந்த 3 ஆண்டுகளில் 40 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், தமிழ்நாட்டில் தலித்துகள் துயரமான நிலையில் உள்ளனர்.

தலித் சமூக பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு வழக்குகளின் தண்டனை எண்ணிக்கை கவலை அளிக்கும் வகையில், தேசிய சராசரி தண்டனை விகிதத்தில் பாதியாக உள்ளது. மேலும், ஒரு காலத்தில் அம்பேத்கர் கொண்டிருந்த பார்வையின் மையமாக இருந்த சமூக நீதி, துரதிருஷ்டவசமாக வெறும் அரசியல் முழக்கமாக மாறிவிட்டது.

உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் உறுப்பினர்களுக்கு பதவி மறுப்பு செய்திகள் இந்த கடுமையான அநீதியை மேலும் அடிக்கோடிட்டு காட்டுகின்றன. பிரதமர் நரேந்திர மோடியால் விடுக்கப்பட்ட அழைப்பின்படி, நமது அரசியலமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட 75வது ஆண்டை தேசம் ஆண்டு முழுவதும் கொண்டாடுகிறது.

இந்த தருணம் அம்பேத்கரின் கொள்கைகளுக்கு ஏற்ப வாழ்வதற்கான நமது கூட்டு மற்றும் தனிப்பட்ட பொறுப்பின் சக்திவாய்ந்த நினைவூட்டலாக அமையட்டும். இந்த தருணத்தை ஒரு சமூக இயக்கமாக மாற்றுவோம்.

அம்பேத்கரின் தொலைநோக்கு பார்வையை நிலைநிறுத்தவும் உள்வாங்கவும், வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் சமூக நீதிக்காக இடைவிடாமல் போராடவும் உறுதியேற்போம். இவ்வாறு அவர் கூறினார்.

தி.மு.க.வி.சி.க. கூட்டணியை உடைக்க நினைக்கிறாரா விஜய்? திருமா

மதுரை, டிச.9

சென்னையில் நடைபெற்ற 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' நூல் வெளியீட்டு விழாவில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் தலைவர் விஜய் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், "டாக்டர் அம்பேத்கர் பற்றிய புத்தகத்தின் வெளியீட்டு விழாவிற்கு கூட வி.சி.க.தலைவர்திருமாவளவனால் வர முடியாத அளவிற்கு அவருக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் அழுத்தம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது" என்று குறிப்பிட்டார்.

மேலும், "200 தொகுதிகளை வெல்வோம் என்று கூறும் ஆட்சியாளர்களை 2026 தேர்தலில் மக்களே மைனஸ் ஆக்கிவிடுவார்கள்" என்று கூறிய விஜய், "வேங்கைவயல் ஊரில் என்ன நடந்தது என்று அனைவருக்கும் தெரியும். சமூகநீதி பேசும் இங்குள்ள அரசு அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுத்ததுபோன்று எனக்கு தெரியவில்லை. இதையெல்லாம் அம்பேதகர் பார்த்தால் வெட்கப்பட்டு தலைகுணிந்துபோவார்" என்று விமர்சித்தார். அதே சமயம், விஜய்யின் பேச்சில் தனக்கு உடன்பாடு இல்லை என்று திருமாவளவன் கூறியுள்ளார். கூட்டணி கட்சிகளிடம் இருந்து தனக்கு எந்த அழுத்தமும் இல்லை என்றும், அழுத்தம் கொடுத்து அதற்கு இணங்கக்கூடிய அளவுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி பலவீனமாக இல்லை என்றும் திருமாவளவன் தெரிவித்துள்ளார். இந்த நிலையில், மதுரையில் இன்று திருமாவளவன் செய்தியாளர்களிடம் பேசியபோது, "தி.மு.க.வி.சி.க. கூட்டணியை விஜய் உடைக்க நினைக்கிறாரா?" என்று செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த திருமாவளவன், "விஜய் ஒரு கட்சியை தொடங்கியிருக்கிறார், ஆட்சிக்கு வர வேண்டும் என்று ஆசைப்படுகிறார். எனவே அவருக்கு அந்த நோக்கம் இருக்கத்தானே செய்யும். தி.மு.க.தான் தன்னுடைய முதல் எதிரி என்று வெளிப்படையாக தானே விஜய் சொல்கிறார்" என்றார். மேலும், "ஆதவ் அர்ஜுனா மீது வி.சி.க. சார்பில் நடவடிக்கை எடுக்கப்படுமா?" என்ற கேள்விக்கு, "அறிவிப்பு வரும்" என்று திருமாவளவன் பதிலளித்தார்.

சீனாவுக்கான அமெரிக்க தூதராக டேவிட் பெர்டியூ நியமனம்: டிரம்ப் அறிவிப்பு

வாஷிங்டன் டி.சி., டிச.9

அமெரிக்காவில் கடந்த 5ந்தேதி நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மையான இடங்களை கைப்பற்றி, குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதியான டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றார். இதனை தொடர்ந்து, பல்வேறு பதவிகளுக்கு ஆட்களை அவர் நியமித்து வருகிறார். இதன்படி, அமெரிக்காவில் ஜார்ஜியா மாகாண முன்னாள் செனட் உறுப்பினரான டேவிட் பெர்டியூவை, சீனாவுக்கான அமெரிக்க தூதராக டிரம்ப் நியமித்து உள்ளார்.

இதுபற்றி டிரம்ப் அவருடைய ட்ரூத் சோசியல் என்ற சமூக ஊடக தளத்தில் வெளியிட்ட பதிவில், பார்ச்சூன் 500ன் தலைமை செயல் அதிகாரி, 40 வருடம் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டவர், அமெரிக்க செனட்டராக பணியாற்றியவர் டேவிட். சீனாவுடனான நம்முடைய உறவை கட்டியெழுப்ப மதிப்புமிக்க நிபுணத்துவத்துடன் செயல்படுவார்.

சிங்கப்பூர் மற்றும் ஹாங்காங்கில் வசித்திருக்கிறார். தொழிலின் பெரும் பகுதியாக ஆசியா மற்றும் சீனாவில் அவர் பணியாற்றி இருக்கிறார் என தெரிவித்து உள்ளார். சீன தலைவர்களுடன் ஆக்கப்பூர்வ செயல்பாட்டுக்கான உறவை ஏற்படுத்தவும், அந்த பகுதியில் அமைதியை பராமரிப்பதற்கான என்னுடைய செயல் திட்டம் அமல்படுத்தப்படவும் துணை புரிவார் என்றும் டிரம்ப் அதில் தெரிவித்து இருக்கிறார்.

வங்காளதேசத்தில் இந்து கோவில் மீது தாக்குதல்; சிலைகள் தீயில் எரிந்து சேதம்



டாக்கா, டிச.9

வங்காளதேசத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் நடத்திய போராட்டம் வன்முறையாக மாறியது. பல இடங்களில் மாணவர்களுக்கும். ஆளும் அவாமி லீக் கட்சியினருக்கும் இடையே மோதல் வெடித்தது. போராட்டத்தை ஒடுக்குவதற்காக போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்த வன்முறை போராட்டங்களில் மாணவர்கள், காவல்துறையினர். அப்பாவி பொதுமக்கள் என ஏராளமானோர் கொல்லப்பட்டனர். பிரதமரின் இல்லத்தை போராட்டக்குழுவினர் முற்றுகையிட்டதால் பெரும் பதற்றம் உருவானது.

அசாதாரண சூழல் நிலவியதையடுத்து, கடந்த ஆகஸ்ட் 5ம் தேதி பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். வங்காளதேசத்தில் அவாமி லீக் அரசாங்கம் கவிழ்ந்ததையடுத்து, முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு பொறுப்பேற்றது. இடைக்கால அரசு பொறுப்பேற்றபிறகு நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை அதிகரிக்க தொடங்கியது. குறிப்பாக இந்துக்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படுகிறது. சமீபத்தில் இந்து அமைப்பின் தலைவரும், இஸ்கான் முன்னாள் துறவியுமான சின்மய் கிருஷ்ண தாஸ் கடந்த மாதம் நவ25 ம் தேதி தேசத்துரோக வழக்கில் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில், சின்மோய் கிருஷ்ண தாஸுக்கு ஆதரவாக செயல்பட்ட ராமன் ராய் என்ற வழக்கறிஞர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாக கொல்கத்தாவில் உள்ள இஸ்கான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ராதாரமன் தாஸ் தெரிவித்திருந்தார். சின்மோய் கிருஷ்ண தாசுக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆஜராக தயாராக இருக்கும் வழக்கறிஞர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு வங்காளதேச அரசிடம் இஸ்கான் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து இஸ்கான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ராதாரமன் தாஸ் வெளியிட்டுள்ள தனது எக்ஸ் பதிவில் கூறியுள்ளதாவது:

வங்கதேசத்தின் தலைநகர் டாக்காவின் நம்ஹட்டா பகுதியில் இஸ்கான் மையம் அமைந்துள்ளது. இந்த மையம் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. அந்த வளாகத்தில் இருந்த கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருந்த ஸ்ரீ லஷ்மி நாராயண் உள்ளிட்ட கடவுள் சிலைகள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. இந்த சம்பவத்தில் கோவில் முழுவதும் சேதமாகியுள்ளது. இந்த கோயிலுக்குள் புகுந்த மர்ம நபர்கள் தீவைத்துள்ளனர். டாக்கா மாவட்டம் துராக் போலீஸ் சரகத்தில் இந்த இடம் அமைந்துள்ளது. கோயிலின் கூரை மீது பெட்ரோல் அல்லது ஆக்டேனை ஊற்றி மர்ம நபர்கள் தீவைத்துள்ளனர். இதுதொடர்பாக வங்கதேசத்தில் உள்ள அரசிடம் இஸ்கான் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், போதுமான பாதுகாப்பு நடவடிக்கைகளை போலீசாரும், அரசு அதிகாரிகளும் எடுக்கவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்; டிரம்ப் வெற்றிக்காக ரூ.2,286 கோடி செலவு செய்த எலான் மஸ்க்!

வாஷிங்டன், டிச.9

அமெரிக்காவில் கடந்த மாதம் நடந்த அதிபர் தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளர் டிரம்ப் வெற்றி பெற்றார். அவர் அடுத்த மாதம் 20ந்தேதி அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்க உள்ளார். டொனால்டு டிரம்புக்கு இந்த தேர்தலில் உலக பெரும் பணக்காரர் எலான் மஸ்க் பெரிதும் உறுதுணையாக இருந்தார். டிரம்புக்கு ஆதரவாக தீவிர பிரசாரம் செய்ததோடு, டிரம்பின் வெற்றியை உறுதி செய்ய அவரது பிரசார குழுவுக்கு நிதியை வாரி வழங்கினார்.

இந்த நிலையில் தேர்தலின்போது டிரம்பின் வெற்றிக்காக எலான் மஸ்க் மொத்தமாக 270 மில்லியன் டாலர் (சுமார் ரூ.2,286 கோடி) செலவு செய்தது தற்போது தெரியவந்துள்ளது. இதன் மூலம் அமெரிக்க வரலாற்றிலேயே அரசியல்கட்சிக்கு அதிகளவில் நன்கொடை கொடுத்தவர் என்கிற பெருமையை எலான் மஸ்க் பெற்றுள்ளார். எலான் மஸ்க்கிற்கு தனது நிர்வாகத்தில் செயல்திறன் துறையின் தலைவர் என்ற மிக முக்கிய பொறுப்பையும் டிரம்ப் கொடுத்துள்ளார்.

கல்லூரி மாணவி கூட்டு பலாத்காரம் தோழி உள்பட 9 பேர் மீது வழக்குப்பதிவு

சென்னை, டிச.9
சென்னையில் கல்லூரி மாணவி ஒருவரை தங்கும் விடுதிகளுக்கு அழைத்து சென்று கும்பல் ஒன்று பாலியல் பலாத்காரம் செய்த கொடூரம் அரங்கேறியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக அவரது தோழி உள்பட 9 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். சென்னையில் உள்ள மகளிர் கல்லூரி ஒன்றில் 21 வயதுடைய மன வளர்ச்சி குன்றிய மாணவி ஆங்கில இலக்கியம் 3ம் ஆண்டு படித்து வருகிறார். இவருடைய தந்தை சரக்கு வாகன டிரைவர் ஆவார். இவரது தாயார் கடந்த 2022ம் ஆண்டு இறந்துவிட்டார். அயனாவரம் பகுதியை சேர்ந்த இவர் தினமும் ஆட்டோ மூலம் கல்லூரிக்கு வந்து செல்வது வழக்கம். கடந்த மாதம் மாணவியின் செல்போன் எண்ணுக்கு ஆபாச குறுந்தகவல்களும், தேவையில்லாத அழைப்புகளும் வந்துள்ளதை பார்த்து அவரது தந்தை அதிர்ச்சியடைந்து, அயனாவரம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் அவர், தனது மகளுக்கு 'செமஸ்டர்' தேர்வு நடந்ததால் விசாரணை தேவையில்லை என்று கூறியுள்ளார். இந்த நிலையில் கடந்த 6ந்தேதி அன்று மாணவி உடல்நிலியாக பாதிக்கப்பட்டுள்ளார். தந்தை விசாரித்த போது, 'என்னை கல்லூரி வாசலில் இருந்து சிலர் வெளியே அழைத்து சென்று பலமுறை பாலியல் பலாத்காரம் செய்தனர்' என்ற அதிர்ச்சி தகவலை கூறியுள்ளார். இதைக்கேட்டு அதிர்ந்து போன அவர், அயனாவரம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் மனு அளித்தார். ஆனால், மாணவியை கல்லூரி அருகில் இருந்து அழைத்து சென்றிருப்பதால் சிந்தாதிரிப்பேட்டை அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்க ஆலோசனை வழங்கினார்கள். அதன்படி அவரும் புகார் அளித்தார். சிந்தாதிரிப்பேட்டை அனைத்து மகளிர் போலீசார், அந்த மாணவிடம் விசாரித்த போது, அவர் தனது கல்லூரி தோழி மூலம் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் அறிமுகமான நரேஷ், சுரேஷ், சீனு ஆகிய 3 பேர் அவரை யானைக்கவுனி, பெரிய மேடு பகுதிகளில் உள்ள தனியார் தங்கும் விடுதிகளுக்கு அழைத்து சென்று பலமுறை பாலியல் உறவு கொண்டதாகவும், மேலும் திருப்பூரை சேர்ந்த கவி, கோயம்பேட்டைசேர்ந்தரோஷன், அம்பத்தூரை சேர்ந்த பாண்டி, திருத்தணியை சேர்ந்த மணி ஆகியோர் 'ஸ்னாப் ஸாட்' மூலம் பழகி அவர்களும் என்னை இந்த தங்கும் விடுதிகளுக்கு அழைத்து சென்று பாலியல் உறவில் ஈடுபட்டனர் என்றும் கூறியுள்ளார். முதற்கட்டமாக மாணவி அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சிந்தாதிரிப்பேட்டை அனைத்து மகளிர் போலீசார் 8 பேர் மீது பெண்ணை பாதுகாவலரின் அனுமதியின்றி அழைத்து செல்லுதல், அனுமதியின்றி தொடுதல், பெண்ணின் கண்ணியத்தை அவமதித்தல் உள்ளிட்ட 9 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்து உள்ளனர். குற்றத்துக்கு உடந்தையாக இருந்ததாக அந்த மாணவியின் தோழி மீதும் வழக்கு பாய்ந்துள்ளது. இந்த வழக்கில் போலீசார் விசாரணையை தொடங்கி உள்ளனர். வழக்கில் சிக்கியவர்கள் கைதான பின்னர், இந்த விவகாரத்தில் மேலும் திடுக்கிடும் தகவல்கள் வெளியாக வாய்ப்பு உள்ளது. சென்னை அயனாவரத்தில் கடந்த 2018ம் ஆண்டு மன வளர்ச்சி குன்றிய சிறுமி 17 பேர் கும்பலால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தை போன்று இந்த சம்பவமும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்து அமைப்புகளின் கலந்தாய்வு கூட்டம் அண்ணாமலை பங்கேற்பு

ஈரோடு, டிச.9
ஈரோடு வேப்பம்பாளையத்தில் உள்ள ஒரு தனியார் திருமண மண்டபத்தில் இந்து அமைப்புகள் பங்கேற்கும் கலந்தாய்வு கூட்டம் தொடங்கியது.

2 நாட்கள் நடைபெறும் கலந்தாய்வுக் கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., இந்து முன்னணி உள்ளிட்ட இந்த அமைப்புகளின் முக்கிய தலைவர்கள், நிர்வாகிகள் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தில் வட தமிழக ஆர்.எஸ்.எஸ். செயலாளர் ஜெகதீசன், இந்து முன்னணி காடேஸ்வர் சுப்பிரமணி, தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, பா.ஜ.க. முன்னாள் தலைவர் பொன் ராதாகிருஷ்ணன், வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ., தேசிய செயற்குழு உறுப்பினர் ஹெச். ராஜா உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். இன்றும், நாளையும் என 2 நாட்கள் நடைபெறும் இந்த கூட்டத்தில் இந்து அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் தலைமை பண்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர். இந்தக்கூட்டம் நாளை மாலை 4 மணி வரை நடைபெறுகிறது.

படப்பை அருகே மனைவியை கொலை செய்த கணவர் போலீசில் சரண்

படப்பை, டிச.9
காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அடுத்த மாடம்பாக்கம், தாய்மூகாம்பிகை நகரைச் சேர்ந்தவர் கோபால் ராஜ் (33). இவர் அதே பகுதியில் பழைய இரும்பு கடை நடத்தி வருகிறார். இவரது மனைவி பரமேஸ்வரி (26), இருவருக்கும் திருமணம் நடந்து 10 வயதில் மகனும், 6 வயதில் மகளும் உள்ளனர். கோபால்ராஜிக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. இந்த நிலையில் மதுபோதையில் வீட்டிற்கு வந்த கோபால் ராஜ், மனைவியின் நடவடிக்கையில் சந்தேகம் ஏற்பட்டு பரமேஸ்வரியிடம், தகராறில் ஈடுபட்டுள்ளார். ஒரு கட்டத்தில் ஆத்திரம் அடைந்த அவர், பரமேஸ்வரியை கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டு, மணிமங்கலம் காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். அவர் அளித்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற மணிமங்கலம் போலீசார் பரமேஸ்வரியின் உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக குரோம்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் குறித்து கோபால்ராஜிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

வந்தே பாரத் ரெயிலில் தானியங்கி கதவு திறக்காததால் திண்டுக்கல்லில் பயணிகள் பரிதவிப்பு

திண்டுக்கல், டிச.9
சென்னையில் இருந்து நெல்லைக்கு வந்தே பாரத் ரெயில் (வண்டி எண் 20665) வாரத்தில் 6 நாட்கள் இயக்கப்படுகிறது. இந்த ரெயில் நேற்று மதியம் 2.50 மணிக்கு சென்னையில் இருந்து நெல்லை நோக்கி புறப்பட்டது. அதில் ஏராளமானோர் பயணம் செய்தனர். இந்தநிலையில் இரவு 7.45 மணி அளவில் திண்டுக்கல் ரெயில் நிலையத்தை, வந்தே பாரத் ரெயில் வந்தடைந்தது. அப்போது ரெயிலில் உள்ள தானியங்கி கதவுகள் வழக்கம்போல் திறக்கப்பட்டன. ஆனால் சி 4, சி 5 ஆகிய 2 பெட்டிகளின் கதவுகள் மட்டும் திறக்கப்படவில்லை. மற்ற கதவுகள் தானாக திறக்கப்பட்டது. அந்த பெட்டிகளில் பயணம் செய்த திண்டுக்கல்லை சேர்ந்த பயணிகள் ரெயிலில் இருந்து இறங்கிச் சென்றனர். ஆனால் சி 4, சி 5 ஆகிய பெட்டிகளில் பயணம் செய்தவர்கள் மட்டும் திண்டுக்கல்லில் இறங்கமுடியாமல் ரெயில் பெட்டிக்குள்ளேயே தவித்தபடி நின்றனர். 5 நிமிடங்களுக்கு மேலாகியும் கதவுகள் திறக்கப்படாததால் அந்த பெட்டியில் பயணம் செய்யும் டிக்கெட் பரிசோதகரிடம் பயணிகள் புகார் தெரிவித்தனர்.

இதையடுத்து அவர், ரெயில் என்ஜின் டிரைவரை தொடர்புகொண்டு பேச முயன்றார். ஆனால் அதற்குள் ரெயில் திண்டுக்கல் ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு நகர தொடங்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த பயணிகளில் ஒருவர், அபாய சங்கிலியை பிடித்து இழுத்தார். இதற்கிடையே திண்டுக்கல் ரெயில் நிலையத்தை கடந்த ரெயில் சிலகிலோ மீட்டர் தொலைவில் சென்று பாதி வழியில் நின்றது.

தொடர்ந்து பயணிகளிடம் பேசிய டிக்கெட் பரிசோதகர், திண்டுக்கல் ரெயில் நிலையத்தைவிட்டு சிலகிலோ மீட்டர் தூரம் ரெயில் கடந்து வந்துவிட்டது. எனவே கொடைரோடு ரெயில் நிலையத்தில் உங்களை இறக்கிவிட்டு, தூத்துக்குடியில் இருந்து மைசூர் நோக்கி செல்லும் ரெயிலில் கட்டணம் இன்றி திண்டுக்கல்லுக்கு அழைத்துச்செல்ல ஏற்பாடு செய்வதாக தெரிவித்தார். இதையடுத்து பயணிகள் சமாதானம் அடைந்தனர். பின்னர் இரவு 8.10 மணிக்கு வந்தே பாரத் ரெயில் கொடைரோடு ரெயில் நிலையத்தை அடைந்தது. வழக்கமாக கொடைரோடு ரெயில் நிலையத்தில் வந்தே பாரத் ரெயில் நின்று செல்லாது. ரெயில் பெட்டியில் சிக்கிய பயணிகளுக்காக நேற்று கொடைரோடு ரெயில் நிலையத்தில் அந்த ரெயில் நிறுத்தப்பட்டது. பின்னர் ரெயிலில் இருந்து இறங்கியவர்களில் கைக்குழந்தையுடன் வந்த ஒரு பெண் மட்டும் வாடகை காரில் திண்டுக்கல் சென்றார். மற்ற 11 பேரையும், மைசூர் எக்ஸ்பிரஸ் ரெயிலில் ஏற்றி ரெயில்வே அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். அவர்கள் இரவு 9.15 மணிக்கு திண்டுக்கல்லை வந்தடைந்தனர். நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட வந்தே பாரத் ரெயில் பெட்டிகளின் கதவு திறக்கப்படாததால் சுமார் 1½ மணி நேரம் பயணிகள் தவித்த சம்பவம் திண்டுக்கல்லில் பரபரப்பை ஏற்படுத்தியது.

சினிமா செய்திகளை பார்ப்பது இல்லை விஜய் குறித்த கேள்விக்கு உதயநிதி ஸ்டாலின் கிண்டல்

வேலூர், டிச.9
வேலூர் மாவட்டம், காட்பாடி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. இதில் சிறப்பு அழைப்பாளராக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு 247 ஊராட்சிக்கு 345 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கினார். ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, சமூக நலத்துறை, வேளாண் துறை உள்ளிட்ட 15 துறைகளின் சார்பில் 4,844 பயனாளிகளுக்கு ரூ.128.92 கோடி மதிப்பபிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் அவர் பேசியதாவது: தமிழகத்தில் 31 வது நிகழ்ச்சியாக கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. விளையாட்டுத்துறை குறித்து மக்களிடையே புரிதல் ஏற்பட்டுள்ளது. இதற்கு திராவிட மாடல் அரசின் செயல்பாடுகள் தான் காரணம். சர்வதேச சேது ஒலிம்பிக் போட்டி நடத்தியதை பார்த்து வெளிநாட்டினரும் பாராட்டு தெரிவித்தனர். விளையாட்டு வீரர்கள் நித்யஸ்ரீ, யாசிப் ஆகியோர் இங்கு வந்துள்ளனர். அவர்கள் சர்வதேச போட்டிகளில் சாதனை படைத்து வருகின்றனர்.

அவர்களுக்கு பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன். சாதிக்க எதுவுமே தடையில்லை. தமிழகத்தில் தாய்மார்களுக்கான ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. மகளிருக்கான திட்டங்களை ஒவ்வொரு நாளும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். கோடிக்கணக்கான ரூபாய் மகளிர்கடன் வழங்கப்பட்டு வருகிறது. திராவிட மாடல் அரசு உங்களை மேலும் உயர்த்தும். மாற்றுத்திறனாளிகளுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. யார்? யாருக்கு என்ன தேவை என்பதை பார்த்து, பார்த்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செய்து கொண்டிருக்கிறார். திராவிட மாடல் ஆட்சியின் காரணமாக மக்களிடம் மகிழ்ச்சியை பார்க்கிறோம். மகளிர் பொருளாதார மேம்பாடு அடைய திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. விடியல் பயணத்திட்டத்தில் இதுவரை 580 கோடி பெண்கள் இலவச பயணம் சென்றுள்ளனர். இதன்மூலம் அவர்களுக்கு மாதம் தோறும் ரூ.1000 வரை மிச்சமாகிறது. அரசு தொடக்கப் பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டம் மூலம் 20 லட்சம் குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ் ரூ.1.16 லட்சம் கோடி இதுவரை வழங்கப்பட்டுள்ளது மகளிர்களின் உழைப்பின் மீது நம்பிக்கையால் அவர்களுக்கு தொடர்ந்து கடன் உதவி வழங்கப்படுகிறது. இங்கு விளையாட்டு உபகரணங்கள் பெற்ற விளையாட்டு வீரர்கள் இந்தியாவிலேயே சிறந்த வீரர்களாக உருவாக வேண்டும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இங்கு விளையாட்டு உபகரணங்கள், நலத்திட்ட உதவிகள் பெற்ற அனைவருக்கும் என்னுடைய அன்பையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார். விழாவில் கலந்துகொண்ட துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் நடிகர் விஜய் பேச்சு குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த உதயநிதி ஸ்டாலின் நான் சினிமா செய்திகளை பார்ப்பதில்லை. தமிழகத்தில் மன்னர் ஆட்சி நடக்கவில்லை. மக்களாட்சி தான் நடக்கிறது என்றார்.

தமிழக மீனவர்கள் மீண்டும் கைது: இலங்கை கடற்படை அட்டூழியம்

ராமநாதபுரம், டிச.9
எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர்கைதுசெய்வது தொடர் கதையாகி வருகிறது.

இந்த நிலையில், நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது எல்லை தாண்டியதாக ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை சேர்ந்த 8 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. மேலும் மீனவர்களின் 2 விசைப்படகுகளையும் பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர் கைதான மீனவர்களை காங்கேசன் துறைமுக முகாமுக்கு அழைத்து சென்றுள்ளனர். இச்சம்பவம் மீனவ கிராம மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 3ந்தேதி நெடுந்தீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி 18 தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்த நிலையில் தற்போது 8 மீனவர்களை கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

திருமாவளவனுக்கு யாரும் அழுத்தம் கொடுக்கவில்லை அமைச்சர்

திருச்சி, டிச.9
துணை முதலமைச்சர் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட, மாநகர தி.மு.க. இளைஞர் அணியின் சார்பாக கட்சியின் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடந்தது. இதில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பொற்கிழி வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தற்போது அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. எனவே மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு கூடுதல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது. தற்போது பி.டி. அசிஸ்டன்ட் 3000 ஆசிரியருக்கான தேர்வு நடத்தப்பட்டு சான்றிதழ்கள் சரிபார்க்கும் பணி நிறைவடைந்து அவர்களுக்கு பணி வழங்கப்படக் கூடிய சூழலில் உள்ளது. ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் தங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததன் காரணமாக 3000 பேரையும் பணி நியமனம் செய்ய முடியாத நிலை உருவாகி உள்ளது. இடைநிலைப் பள்ளி ஆசிரியர் காலி பணியிடங்கள் உள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளாக கண்டுகொள்ளப்படவில்லை. பணி நியமனத்திற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்களுக்கும் சேர்த்தே தேர்வு நடத்தியுள்ளோம். தி.மு.க.வை பொறுத்தவரை மக்களுக்கு உண்மையாக உழைக்ககூடியவர்களாக இருக்கிறோம். மக்களுக்கு பயன்படும் வகையில் நல்ல ஆட்சியை தி.மு.க. தந்து கொண்டிருக்கிறது. விடுதலை சிறுத்தை துணை பொதுச்செயலாளர் கூறிய கருத்துக்கள் குறித்து அவர்கள் இயக்கத்துக்குள் பேசி முடிவு செய்து கொள்வார்கள். தி.மு.க. விடுதலை சிறுத்தைகள் கூட்டணி அண்ணன், தம்பி உறவோடுதான் உள்ளது. இது கொள்கைக்கான கூட்டணி. அதனால்தான் இந்த கூட்டணி வலுவாக இருக்கிறது. இந்த கூட்டணியில் பிளவு ஏற்படாதா என்று நிறைய பேர் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதெற்கெல்லாம் நாங்கள் இடம்தரமாட்டோம். இவ்வாறு அவர் கூறினார். தொடர்ந்து அம்பேத்கர் புத்தக விழாவில், திருமாவளவன் கலந்து கொள்ளாததற்கு தி.மு.க. கூட்டணியின் அழுத்தம் தான் காரணம் என்று விஜய் கூறியது தொடர்பாக நிருபர்கள் கேட்ட போது, திருமாவளவன் ஒரு சுயமரியாதைக்காரர். அவ்வளவு எளிதாக யாரும் அவருக்கு அழுத்தம் கொடுத்து விட முடியாது. அவர் மிகப்பெரிய தலைவர். அவரை நாங்கள் மதிக்கிறோம் என்றார்.

வசிஷ்டநதியில் குதித்து மாயமான கர்ப்பிணி பெண் 7 நாட்களுக்கு பின் பிணமாக மீட்பு

வாழப்பாடி, டிச.9
சேலம் மாவட்டம் வாழப்பாடி அடுத்த பேளூர் கோட்டைமேடு பகுதியை சேர்ந்தவர் ராமு(27). இவரதுமனைவி மோகனாம்பாள் (19). இவர் 6 மாத கர்ப்பிணியாக இருந்தார். காதல் திருமணம் செய்து கொண்ட இருவருக்கும் இடையே கடந்த 1ந் தேதி இரவு தகராறு ஏற்பட்டது. இதில் மனமடைந்த மோகனாம்பாள், பேளூர் அருகே வேட்டைக்காரனூர்பாலத்தில் இருந்து வசிஷ்டநதியில் குதித்தார். இவரை தொடர்ந்து அவரது கணவர் ராமுவும் வஷிஷ்டநதியில் குதித்தார். இதுகுறித்து தகவலறிந்த அந்த பகுதி மக்கள் நள்ளிரவு நேரத்தில் ஆற்றுக்குள் செல்போன் டவரை பிடித்துக் கொண்டு தத்தளித்தபடி உயிருக்கு போராடிய ராமுவை உயிருடன் மீட்டனர். ஆற்றில் குதித்த கர்ப்பிணிப் பெண் மோகனாம்பாள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது குறித்து வாழப்பாடி தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் புதன்கிழமை மாலை வரை தொடர்ந்து 4 நாட்கள் தேடியும், ஆற்றில் வெள்ளம் குறையாததால் மோகனாம்பாளைகண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் தேடும் பணியை தீயணைப்பு துறையினர் நிறுத்திக் கொண்டனர். இன்று அதிகாலை வசிஷ்டநதியில் தண்ணீர் வரத்து குறைந்த நிலையில், பேளூர் அடுத்த ராமநாதபுரத்தில் வசிஷ்ட நதியின் கரையில் ஒரு பெண்ணின் உடல் அழுகிய நிலையில் கிடப்பதை கண்ட இப்பகுதி மக்கள், வாழப்பாடி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து போலீசார் அங்கு சென்று பார்த்தபோது கரை ஒதுங்கிக் கிடந்த பெண் மோகனாம்பாள் என்பது தெரியவந்தது. இதனையடுத்து அவரது தாயார் மற்றும் உறவினர்களை வரவழைத்து உறுதிப்படுத்திய போலீசார், தீயணைப்பு துறையினர் உதவியுடன், மோகனாம்பாளின் உடலை மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர். உடல் அழுகிய நிலையில் காணப்படுவதால் அங்கேயே பிரேத பரிசோதனை நடத்திட போலீசார் முடிவு செய்துள்ளனர். 7 நாட்களுக்கு முன் வசிஷ்ட நதியில் குதித்த கர்ப்பிணிப் பெண் இன்று அதிகாலை பிணமாக மீட்கப்பட்ட சம்பவம் உறவினர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரகடம்வாலாஜாபாத் சாலையில் பண்ருட்டி கண்டிகையில் குண்டும் குழியுமான சாலை



ஒரகடம், டிச.9
காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடத்தை சுற்றி ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. ஒரகடம்வாலாஜாபாத் சாலையில் தொழிற்சாலைகளுக்கு ஏராளமான கனரக வாகனங்கள் வந்து செல்கின்றன. இதனால் ஒரகடம் அடுத்த பண்ருட்டி கண்டிகை என்ற இடத்தில் சாலையில் பள்ளங்கள் ஏற்பட்டு குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் அவ்வழியே செல்லும் இருசக்கர வாகன ஓட்டிகள் இந்த பகுதியில் பள்ளத்தில் நிலைதடுமாறி கீழே விழுந்து அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. இதனால் சில உயிர் இழப்புகள் ஏற்படுகிறது. கார் உள்ளிட்ட வாகனங்கள் வேகமாக வந்து பள்ளத்தை கண்டதும் திடீரென பிரேக் போடுவதால் பின்னால் வரும் வாகனம் மோதி விபத்துகள் ஏற்படுகின்றது. குண்டும் குழியுமாக உள்ள இந்த சாலையை சீரமைக்க இப்பகுதி மக்கள் பல முறை நெடுஞ்சாலை துறைக்கு கோரிக்கை வைத்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை என கூறப்படுகிறது. இது குறித்து மாவட்ட நிர்வாகம் தலையிட்டு குண்டும் குழியுமான சாலையை சீரமைக்க அந்த பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் நடந்த மருத்துவ முகாமில் அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களுடன் சந்திப்பு

கடலூர், டிச.9

கடலூர் மாவட்டத்தில் செய்தியாளர் சந்திப்பின் போது அன்புமணி ராமதாஸ் பேசியதாவது:

சென்னையில் செம்பரம்பாக்கம் ஏரி போன்று தற்போது சாத்தனூர் அணை விவகாரம் மாறி உள்ளது. சாத்தனூர் அணை சம்பவத்தால் 20 பேருக்கு மேல் உயிரிழந்திருக்கிறார்கள்.

பொதுமக்கள் தூங்கிக் கொண்டிருந்த நேரத்தில் ஒரு லட்சத்தை 70 ஆயிரம் கன அடி நீரை திறந்து விட்டிருக்கிறார்கள். சாதாரணமாக இந்த நீரை திறந்து விட்டால் வந்து சேர்வதற்கு ஒரு நாள் ஒன்றரை நாள் ஆகும். ஆனால் தற்போது தென்பெண்ணை ஆற்றில் மணல் திருட்டு நடைபெற்று இருப்பதால் 68மணி நேரத்தில் வந்து விட்டது.

இந்த வெள்ள பாதிப்பால் 20000 மேற்பட்ட கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ குடிசைகள் சேதாரம் ஆகி உள்ளது.

அதிமுக ஆட்சியிலும் சரி திமுக ஆட்சியிலும் சரி தானே புயலுக்குப் பிறகு கடலூர் மாவட்டம் குடிசையில் மாவட்டம் என்று அறிவித்தார்கள்.

கடலூர் மாவட்டத்தில் 4000 ஏக்கர் விவசாய நிலங்கள் அழிந்துள்ளது. காரணம் தென்பெண்ணை ஆற்றில் உள்ள மணல் விவசாய நிலங்களில் வந்து மலை மேடு போல குவிந்துள்ளதால் விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் காலத்து நடைமுறையை பின்பற்றி தற்போதும் அணைகளை திறக்கும் உத்தரவை பிறப்பிக்கும் அதிகாரம் முதலமைச்சரிடம் வைத்திருப்பது தவறு.. அதனை அந்தந்த அதிகாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும். இது முழுக்க முழுக்க தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட விஷயம் இதற்கும் அரசியல்வாதிகளுக்கும் சம்பந்தம் கிடையாது.

அதிகாரிகளிடம் இந்த அதிகாரம் இருந்தால் இது போன்ற சேதாரம் பாதிப்புகள் ஏற்பட்டிருக்காது.

அமைச்சர் பொன்முடி மீது சேற்றை வாரி இறைத்தது தவறு. அமைச்சர் மீது மட்டுமல்ல யார் மீதும் சேற்றை வாரி இருப்பது தவறு. அதே நேரத்தில் மக்களின் கோபம் புரிகிறது. ஆனால் கோபத்தை வெளிப்படுத்த வேறு வழிகள் உள்ளது. அதே நேரத்தில் அந்த மக்கள் மீது வழக்கு பதிவு செய்வதும் தவறு என்று குறிப்பிட்டார்.

கூட்டணி விவகாரத்தில் மிக கவனமாக இருக்க வேண்டும்: திருமாவளவன்

சென்னை, டிச.9

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறியதாவது:

கூட்டணி விவகாரத்தில் மிக கவனமாக இருக்க வேண்டும். கூட்டணி விவகாரத்தில் நாங்கள் உறுதியான நிலைப்பாட்டில் உள்ளோம்.

அங்கே சென்றால் அது கிடைக்கும், இது கிடைக்கும் என்று தாவுபவர்கள் நாங்கள் அல்ல.★ அங்கே போனால் அள்ளலாமா என்ற எண்ணம் எங்களுக்கு கிடையாது. கூட்டணி விவகாரத்தில் விசிகவிற்கு பேராசை கிடையாது.

அம்பேத்கர் எங்களுக்கு வணிகப்பொருள் அல்ல, எங்களுக்கான கருத்தியல் அடையாளம். அரசியல் அதிகாரத்தின் மூலம் என்ன மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது முக்கியம்.

தொண்டர்களுக்கு எந்த தடுமாற்றமும் ஏற்பட்டு விடக்கூடாது.★ நமது சுயமரியாதையை எவனும் குறைத்து மதிப்பிட முடியாது. கருத்தியல் களத்தில் உறுதியாக இருக்கிறோம். நாம் பின்வாங்குவதாக, தடுமாறுவதாக கூறுகிறார்கள். ஆனால் நாம் கருத்தியல் களத்தில் உறுதியாக இருக்கிறோம்.★ நம்பை குறைத்து மதிப்பிடுகின்றனர். ஆனால் நம் சுயமரியாதையை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது என்று கூறினார்.

திருவண்ணாமலை மகா தீப மலையில் புவியியல் வல்லுநர் குழு ஆய்வு

வேங்கிக்கால், டிச.9

திருவண்ணாமலையில் ஃபெஞ்ஜல் புயல் காரணமாக பலத்த மழை பெய்தது. இதனால் மகா தீபம் ஏற்றப்படும் அண்ணாமலையில் ராட்சத பாறைகள் உருண்டு விழுந்து மண் சரிவு ஏற்பட்டது. மண் சரிவு ஏற்பட்டதில் 7 பேர்பரிதாபமாக உயிரிழந்தனர். தற்போது மகா தீப மலையில் ஈரப்பதம் அதிகமாக உள்ளதால் பக்தர்கள் மலையேர அனுமதிக் வேண்டாம் என வனத்துனையினர் வேண்டுக் கோள் விடுத்தனர்.

இதையொட்டி திருக்கார்த்திகை தீப திருவிழாவிற்கு பக்தர்களை மலைக்கு அனுமதிப்பது குறித்த ஆய்வு கூட்டம் திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. இதில் அமைச்சர்கள் எ.வ.வேலு, சேகர்பாபு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆலோசித்தனர்.

இதையடுத்து திருவண்ணாமலை மகா தீப மலையில் சென்னை அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் பிரேமலதா உட்பட 8 பேர் அடங்கிய புவியியல் வல்லுனர் குழுவினர் இன்று ஆய்வு செய்தனர்.

திருமாவளவனுக்கு யாரும் அழுத்தம் கொடுக்க முடியாது: அமைச்சர் அன்பில் மகேஸ் பேச்சு

சென்னை, டிச.9

விகடன் பிரசுரம் மற்றும் வாய்ஸ் ஆப் காமன்ஸ் நிறுவனம் சார்பில் 'எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்' என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னை நந்தம்பாக்கத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், வி.சி.க. துணைப் பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பங்கேற்பதாக கூறப்பட்டது. பின்னர் விழாவில் பங்கேற்கமாட்டேன் என திருமாவளவன் தெரிவித்தார். தி.மு.க. கூட்டணியில் இருப்பதால் விஜய் கலந்து கொள்ளும் விழாவில் கலந்து கொள்ள நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் திருமாவளவன் பங்கேற்க மறுப்பு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியானது. இந்த விழாவில் பங்கேற்காததற்கான காரணத்தை திருமாவளவன் நீண்ட அறிக்கையின் மூலம் விளக்கியிருந்தார்.

இந்த நிலையில் புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், கூட்டணி கட்சிகளின் அழுத்தத்தினால் திருமாவளவன் பங்கேற்வில்லை எனக் கூறினார். இதற்கு மறுப்பு தெரிவித்த திருமாளவன், "எனக்கு எந்த அழுத்தமும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தி இருக்கிறேன். அழுத்தம் கொடுத்து அதற்கு இணங்கக்கூடிய அளவுக்கு நானும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் பலவீனமாக இல்லை" என்று கூறினார்.

இந்த நிலையில் திருமாவளவனுக்கு யாரும் அழுத்தம் கொடுக்க முடியாது என்று அமைச்சர் அன்பில் மகேஸ் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறும் போது, "எங்களுடைய கூட்டணி வலுவாக இருக்கிறது. தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கூறியதுபோல இது கொள்கைக்கானகூட்டணி. இந்த கூட்டணியில் பிரிவு வந்து விடாதா என்று பலர் காத்திருக்கின்றனர். அதற்கு நாங்கள் கண்டிப்பாக இடம் தரமாட்டோம்.

திருமாவளவன் சுயமரியாதைக்காரர்; அவருக்கு யாரும்அழுத்தம்கொடுக்க முடியாது. திருமாவளவன் மிகப்பெரிய தலைவர். அவரை நாங்கள் மதிக்கிறோம். ஆதவ் அர்ஜுனா கருத்து குறித்து தி.மு.க. தலைவர்முடிவெடுப்பார்" என்று கூறினார்.

அடுத்த முறை அம்மா ஆட்சிதான் அமையும்: சசிகலா

7 டிசம்பர் 2024 1:54 PM)

ஜெயலலிதா கொண்டு வந்த திட்டங்களை தி.மு.க. அரசு கிடப்பில் போட்டு உள்ளது. மழை வெள்ளத்தால் சேதமான வாகனங்களை பார்வையிட்டு அதன் உரிமையாளர்களுக்கு ஆறுதல் கூறினார்.

சிங்காரப்பேட்டை: கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் ஃபெஞ்சல் புயல் காரணமாக கடந்த 1ந் தேதி இரவு இடைவிடாத 50 செ.மீ அளவில் பெய்த கனமழை காரணமாக அங்குள்ள ஏரிகள் நிரம்பி உபரிநீர் வெளியேறியது. இதனால் அந்த பகுதியில் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது. மேலும், ஊத்தங்கரையில் வசிக்கும் குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் புகுந்து பொதுமக்களின் பொருட்கள் சேதமானது. இதன் காரணமாக ஊத்தங்கரையில் அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சியினர்

பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண பொருட்களை வழங்கி வருகின்றனர். இந்த நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை சந்திப்பதற்காக சசிகலா இன்று வருகை தந்தார். அவர் மழை வெள்ளத்தால் சேதமான வாகனங்களை பார்வையிட்டு அதன் உரிமையாளர்களுக்கு ஆறுதல் கூறினார். இதைத்தொடர்ந்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 900 க்கும் மேற்பட்ட ஏரிகள் கனமழை பெய்தும் நிரம்பவில்லை. நீர்வளத்துறை எனதனியாக இலாக இருந்தும் மாவட்டத்தில் நீர் மேலாண்மையை தி.மு.க. தலைமையிலான அரசு சரியாக கையாளவில்லை. ஜெயலலிதா கொண்டு வந்த திட்டங்களை தி.மு.க. அரசு கிடப்பில் போட்டு உள்ளது. கார் பந்தயம் உள்ளிட்டவைக்கு செலவு செய்யும் தி.மு.க.அரசு மக்கள் திட்டங்களை செயல்படுத்த மறுக்கின்றது. புயல் காரணமாக கனமழையால் பாதிக்கப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தை தி.மு.க. அரசு கண்டு கொள்ளவில்லை. சாத்தனூர் அணையில் இருந்து தண்ணீரை சீராகத் திறந்து விடாததே வெள்ளப்பெருக்கு காரணம். முன் அறிவிப்பின்றி பொது மக்கள் தூங்கி கொண்டிருக்கும்போது அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதால் தென்பெண்ணையாற்றில் அதிகளவில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு பொது மக்கள் பாதிப்படைத்து உள்ளனர். தி.மு.க. மீது பொது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். எனவே, அடுத்த முறை அவர்கள் ஆட்சிக்கு வரபோவதில்லை. கண்டிப்பாக 2026ம் ஆண்டு அம்மா ஆட்சிதான் அமையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த முதியவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை

சிவகங்கை, டிச.9

கடந்த 2018ம் ஆண்டு வீட்டின் அருகே விளையாடிக்கொண்டிருந்த 7 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக அந்த சிறுமியின் தாயார் கொடுத்த புகாரின் பேரில் தேவகோட்டைஅனைத்து மகளிர் போலீசார் ராஜேந்திரன் (தற்போது வயது 78) என்பவரை கைது செய்து வழக்குப்பதிவு செய்தனர். அவர் மீது சிவகங்கையில் உள்ள போக்சோ சிறப்பு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை சிவகங்கை போக்சோ சிறப்பு கோர்ட்டு விசாரணை நடத்தி வந்தது. இந்நிலையில் நேற்று நடந்த விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்ட முதியவர் ராஜேந்திரனுக்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் ரூ.10 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

தமிழக அரசு கோரிய ரூ.2,000 கோடி நிதியை மத்திய அரசு உடனடியாக வழங்க வேண்டும்: முத்தரசன் வலியுறுத்தல்

சென்னை, டிச.9

மாற்று அரசியல் கருத்து கொண்ட அரசியல் கட்சிகள் ஆளும் மாநிலங்களை மத்திய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"கடந்த நவம்பர் இறுதியில் தமிழ்நாட்டில் கரை கடந்த 'பெஞ்சல்' புயல், பெருமழையும், சூறாவளியும் சேர்ந்து 14 மாவட்டங்களில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக நிலைகுலைந்துள்ளது. இந்த மாவட்டங்களில் நிவாரணப் பணிகளில் மாநில அரசு போர்க்கால வேகத்தில் ஈடுபட்டிருந்தாலும், இயல்புவாழ்க்கை திரும்ப குறைந்தது ஆறு மாதங்கள் ஆகலாம் என மதிப்பிடப்படுகிறது. மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மை இணைச் செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் குழு, கடந்த இரண்டு நாட்களாக பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு சேதாரங்களை மதிப்பீடு செய்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு, தமிழ்நாடு அரசின் முதல்அமைச்சரை தலைமை செயலகத்தில் சந்தித்தபோது, பெஞ்சல் புயல் பாதிப்புகள், ஏற்பட்டுள்ள சேதாரங்கள், நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்கான செலவு மதிப்பீடுகள் என எல்லா விபரங்களும் உள்ளடங்கிய கோரிக்கை விண்ணப்பத்தை முதல்அமைச்சர், உயர் மட்டக் குழுவிடம் வழங்கியுள்ளார்.

முன்னதாக டிசம்பர் 2ந்தேதியில் பிரதமருக்கு கடிதம் எழுதி ரூ.2 ஆயிரம் கோடி உடனடியாக ஒதுக்கி தர வேண்டும் என முறையிட்டுள்ளார். இந்த சூழலில் மத்திய அரசு, தமிழ்நாட்டின் புயல் நிவாரணப் பணிக்கு ரூ.945 கோடி நிதி வழங்கியிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது. ஆனால், இது முதல்அமைச்சரின் கோரிக்கையை ஏற்று, வழங்கப்பட்ட நிதி அல்ல என்பதே உண்மையாகும்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட 'மிக்ஜாம்' புயல், பெருமழை தலைநகர் சென்னை உள்ளிட்ட சுற்றுப்புற மாவட்டங்களையும், தென் மாவட்டங்களையும் புரட்டி போட்டது. அப்போது தமிழ்நாடு அரசு விரிவான அறிக்கை தயாரித்து ரூ.37 ஆயிரத்து 907 கோடி பேரிடர் நிவாரண நிதி வழங்க வேண்டும் என கேட்கப்பட்டது. மாநில அரசின் கோரிக்கைகள் அனைத்தும் "கேளாக் காதில், ஊதப்பட்ட சங்காக" முடிந்து போனது.

இப்போதும் மாநில அதிகாரிகள் புயல், மழை பாதிப்புகளை மதிப்பிட்டு தயாரித்துள்ள அறிக்கையில் உள்ள விபரங்களை ஏற்காமல், மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை பிரிவு, சேதாரங்களையும், பாதிப்புகளையும் குறைத்து மதிப்பீடு செய்து, சுமையை முழுவதும் மாநில அரசின் தலையில் சுமத்த முயற்சிக்கிறது. மாற்று அரசியல் கருத்துக்கள் கொண்ட அரசியல் கட்சிகள் ஆளும் மாநிலங்களை மத்திய அரசு, தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. இந்த பாரபட்ச அணுகுமுறையை ஏற்க முடியாது. தற்போது மத்திய அரசு நிதிக் குழுவின் பரிந்துரைப்படி ஆண்டு தோறும் வழங்கப்படும் பேரிடர் கால நிதி ரூ.945 கோடியை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது கைக்கு வந்து சேர எத்தனை மாதங்கள் ஆகுமோ? நிதிக் குழு பரிந்துரை செய்துள்ள பேரிடர் நிவாரண நிதியில் இருந்து வெறும் 3.51 சதவீதம் மட்டுமே தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. இயற்கை பேரிடர் கால நிவாரணப் பணிகளுக்கு மாநில அரசு கோரும் நிதி அளவில் மூன்றில் ஒரு பங்கு தொகை உடனடியாக வழங்க வேண்டும் என்று பதினாறாவது நிதிக் குழுவில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வலியுறுத்தியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு முதல்அமைச்சர் கோரியுள்ள, பேரிடர் கால நிவாரண நிதி ரூ.2,000 கோடியை மத்திய அரசு உடனடியாக தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது." இவ்வாறு முத்தரசன் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து 2வது நாளாக 1644 கனஅடியாக நீடிப்பு

கிருஷ்ணகிரி, டிச.9

தென்பெண்ணை ஆறு நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பொழிவு இல்லாததால், ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணை 680 கன அடியாக வந்த நீர்வரத்து நேற்று 495 கனஅடியாக சரிந்தது. அணையின் மொத்த கொள்ளளவான 44.28 அடியில் நீர்மட்டம் 41.16 அடியாக உள்ளதால், நீர்வரத்து முழுவதும் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் 11 தடுப்பணைகளை கடந்து, கிருஷ்ணகிரி அணைக்கு வந்து கொண்டிருக்கிறது. அதன்படி, கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து நேற்று 2வது நாளாக விநாடிக்கு 1644 கனஅடியாக நீடித்தது. கிருஷ்ணகிரி அணையின் கீழ் பகுதியில் நெல் அறுவடை பணிகள் நடந்து வருவதால், பாசனத்திற்காக கால்வாயில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், அணையில் இருந்து மணல் போக்கி மதகுகள் வழியாக விநாடிக்கு 1644 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும், பாரூர் ஏரிக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 185 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 140 கனஅடியாக சரிந்தது. ஏரியின் முழு கொள்ளளவான 15.60 அடிக்கு தண்ணீர் நிரம்பியுள்ளதால், நீர்வரத்து முழுவதும் கால்வாய்கள் வழியாக இணைப்பு ஏரிகளுக்கு செல்கிறது. ஊத்தங்கரை அருகே பாம்பாறு அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 2400 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 1726 கனஅடியாக சரிந்தது. அணையின் மொத்த கொள்ளளவான 19.60 அடியில் நீர்மட்டம் 17.78 அடியாக இருந்ததால், அணையின் பாதுகாப்பை கருதி, நீர்வரத்து முழுவதும் 5 மதகுகள் வழியாக திறந்து விடப்பட்டது. தேன்கனிக்கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் இரவு 2 மில்லிமீட்டர் மழை பெய்தது.

பஞ்சப்பள்ளி சின்னாறு அணையில் உபரிநீர் திறப்பு

பாலக்கோடு, டிச.9

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி, அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் தொடர் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகே பஞ்சப்பள்ளி சின்னாறு அணை நிரம்பியது. 50 அடி உயரம் கொண்ட இந்த அணையில் தற்போது 48.3 அடி உயரத்திற்கு நீர் இருப்பு உள்ளது. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 140 கன அடியாக உள்ளது. அதனால் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து உபரிநீர் 148 கன அடி வீதம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் பஞ்சப்பள்ளி, சாமனூர், மாரண்டஹள்ளி, அத்திமுட்லு, பாலக்கோடு, உள்ளிட்ட

சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 4,500 ஏக்கர் விளை நிலம் பாசன வசதி பெறுகிறது. அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றப்படுவதால் எந்த நேரத்திலும் அதிக அளவில் உபரிநீர் வெளியேற்றப்படும் பட்சத்தில் ஆற்றோரும் வீடுகளில் உள்ள பொது மக்கள் பாதுகாப்பு இருக்க வேண்டும் என பொதுப்பணித் துறை அதிகாரிகள் எச்சரிக்கை எடுத்துள்ளனர்.

தூய்மைப் பணியாளர்களுக்கு உரிய மரியாதையை வழங்கிட வேண்டும்: டி.டி.வி.தினகரன்

சென்னை, டிச.9 அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தனது எக்ஸ் வலைத்தளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில் தெரிவித்திருப்பதாவது,

கரூரில் மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் முன்னிலையில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் பங்கேற்க வந்த அம்மாவட்டத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்களை குப்பை அள்ளும் வாகனத்தில் அழைத்துச் சென்றிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியளிக்கின்றன. மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கை பேரிடர் காலங்கள் மட்டுமல்லாது, கொரோனா போன்ற பெருந்தொற்று காலங்களிலும் தன்னலம் கருதாமல், நேர காலம் பார்க்காமல் அயராது உழைக்கும் முன்களப் பணியாளர்களான தூய்மைப் பணியாளர்களை சக மனிதர்களாக கூட பார்க்கும் மனநிலை இல்லாத தி.மு.க அரசின் அதிகாரப்போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

பணி நிரந்தரம், கால முறை ஊதியம், காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட தூய்மைப் பணியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை கூட ஏற்க முன்வராத முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், ஆண்டுக்கு ஒருமுறை அவர்களுடன் அமர்ந்து உணவு உண்பது போல புகைப்படம் எடுத்துக் கொள்வதாலும், அவ்வப்போது புகழ்ந்து பேசுவதாலும் அவர்களுக்கு எந்தவித பயனுமில்லை. எனவே, தூய்மைப் பணியாளர்களை குப்பை அள்ளும் வாகனத்தில் அழைத்துச் சென்ற அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, மக்களை பாதுகாக்கும் பணியில் இரவு பகலாக ஈடுபடும் தூய்மைப் பணியாளர்களுக்கு இனிவரும் காலங்களில் உரிய மரியாதையை வழங்கிட வேண்டும் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்காசி மலர் சந்தையில் மல்லிகைப்பூ விலை கிடுகிடு உயர்வு கிலோ ரூ.4,500க்கு விற்பனை

தென்காசி, டிச.9 தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் போதிய மழை பெய்யாததாலும், பனிப் பொழிவு அதிகமாக இருப்பதாலும், பூக்கள் விளைச்சல் குறைந்துள்ளது. இதன் விளைவாக சங்கரன்கோவில் மலர் சந்தையில் பூக்களின் வரத்து குறைவாக உள்ளது.

இந்நிலையில், இன்று சங்கரன்கோவில் மலர் சந்தையில் ஒரு கிலோ மல்லிகைப்பூ 4 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கேரள வியாபாரிகள் அதிக அளவில் வந்து பூக்களை ஏலம் எடுத்துச் செல்வதும் மல்லிகைப்பூ விலை உயர்வுக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருவண்ணாமலை தீபத் திருவிழா பள்ளிகளுக்கு 9 நாட்கள் விடுமுறை

திருவண்ணாமலை, டிச.9 கார்த்திகை தீப திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் மகா தீபம் ஏற்றும் நிகழ்வு உலக அளவில் பிரபலம்.

அந்த வகையில் இந்த ஆண்டு வரும் மகா தீபத் திருவிழா வரும் 13ம் தேதி நடைபெற உள்ளது. 13ம் தேதி மாலை 6 மணிக்கு திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் 2668 அடி உயர மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்படுகிறது.

இந்நிலையில், அண்ணாமலையார் கோவில் தீபத்திருவிழாவையொட்டி வரும் 8ம் தேதி முதல் 16ம் தேதி வரை 9 நாட்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. 9 நாட்கள் விடுமுறை அறிவிப்பை திருவண்ணாமலை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் வெளியிட்டுள்ளார்.

2026 சட்டசபை தேர்தலில் மக்கள் சரியான தீர்ப்பை வழங்குவார்கள் சசிகலா

கிருஷ்ணகிரி, டிச.9 கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேற்று சசிகலா பார்வையிட்டார்.

தொடர்ந்து புயலால் பாதிக்கப்பட்ட 300க்கும் மேற்பட்ட மக்களுக்கு நிவாரண பொருட்களை அவர் வழங்கினார். பின்னர் சசிகலா நிருபர்களிடம் கூறியதாவது:

தி.மு.க. அரசு மத்திய அரசை குறை கூறுகிறது.

ரூ.2 ஆயிரம் கோடி மழை வெள்ள நிவாரணத்துக்கு தேவை என்று மத்திய அரசை கேட்கின்றனர். தி.மு.க. அரசின் மக்கள் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட மக்களையும், பாதிக்கப்பட்ட பகுதிகளையும், மழை வெள்ள சேதாரத்தையும் பார்க்கவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்க்காமலேயே மத்திய அரசிடம் 2 ஆயிரம் கோடி ரூபாய் தேவை என்று கணக்கு போட்டு கேட்கின்றனர். வருகிற 2026 சட்டசபை தேர்தலில் மக்கள் அவர்களுக்கு சரியான தீர்ப்பு வழங்குவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

மின்சார வாரியத்தை தனியாருக்கு தாரைவார்க்க கூடாது: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, டிச.9 பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளியில் 132 ஏக்கர் நிலப்பரப்பில் 765 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின்நிலையம் அமைக்கப்பட வுள்ளது. அங்கிருந்து அரியலூர் வரை மின்பாதைகள் அமைக்கப்பட உள்ளன. இந்தப் பணிகளை செய்து முடிக்க ரூ.4,500 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கும் நிலையில், இந்தத் திட்டத்தை தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்த தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது. கடந்த ஆட்சியிலேயே பல துணை மின்நிலையங்களின் பராமரிப்புப் பணிகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், இப்போது ரூ.4500 கோடி மதிப்பில் புதிய துணை மின் நிலையமே அமைக்கப்பட்டால், அது படிப்படியாக மின்சார வாரியம் தனியார் மயமாகவே வழிவகுக்கும்.

தமிழ்நாடு மின்வாரியம் ஏற்கனவே கடுமையான இழப்புகளை சந்தித்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் ரூ.40 ஆயிரம் கோடி அளவுக்கு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்ட பிறகும் கூட மின்சார வாரியம் தொடர்ந்து நஷ்டத்தில்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில், மின்சாரத்தை கொண்டு செல்வதற்காகவும் தனியாருக்கு கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் தமிழ்நாடு மின்சார வாரியத்தை இலாபத்தில் இயக்குவது எப்படி சாத்தியமாகும்? மின்கட்டணத்தை மீண்டும் உயர்த்துவதற்கு மட்டும் தான் இது வழிவகுக்கும். எனவே, 765 கிலோ வோல்ட் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவை அரசு கைவிட வேண்டும். அந்தத் திட்டத்தை மின்தொடரமைப்புக் கழகமே சொந்த முதலீட்டில் செயல்படுத்த வேண்டும். என தெரிவித்துள்ளார்.

பல்லடத்தில் 3 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம்: புலம்பெயர் தொழிலாளர்களின் கைரேகை பதிவு

பல்லடம், டிச.9 திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே சேமலைக்கவுண்டம்பாளையத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த தெய்வசிகாமணி (78 வயது), அவரது மனைவி அமலாத்தாள் (75 வயது), மகன் செந்தில்குமார் (46 வயது) ஆகியோர் கடந்த மாதம் 29ந்தேதி கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டனர். சம்பவம் நடந்து ஒரு வாரம் முடிந்தும் இதுவரை குற்றவாளிகள் பிடிபடவில்லை. இது தொடர்பாக 14 தனிப்படைகள் அமைத்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில் எந்த துப்பும் கிடைக்காததால் போலீசார் திணறி வருகின்றனர்.

இந்நிலையில் 3 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அந்த பகுதியில் கம்பளி போர்வை விற்பனை செய்யும் புலம்பெயர் தொழிலாளர்களிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் புலம்பெயர் தொழிலாளர்களின் கைரேகை, ஆதார் அட்டை நகல்களை சேகரிக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த படுகொலை சம்பவம் தொடர்பாக பல்வேறு கோணங்களிலும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

'கங்குவா' படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் அப்டேட்

தமிழ்சினிமாவின்முன்னணிநடிகர்சூர்யாநடிப்பில்இயக்குனர்சிவாஇயக்கத்தில் வெளியான திரைப்படம் 'கங்குவா'. ஸ்டுடியோ கிரீன் மற்றும் யுவி கிரியேஷன் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தில் திஷா பதானி, பாபி தியோல், யோகி பாபு, ரெடின் கிங்ஸ்லி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார்.

வெற்றி ஒளிப்பதிவு செய்யும் இப்படம் 3டி முறையில் சரித்திர படமாக உருவாகியுள்ளது. இப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் கிட்டத்தட்ட 11500 திரையரங்குகளில் கடந்த 14ந் தேதி வெளியானது. மேலும் இந்த படத்தில் நடிகர் சூர்யா இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறார். அதாவது பழங்குடியின மக்களில் ஒருவனாகவும், மற்றொன்றில் ஸ்டைலிஷான தோற்றத்திலும் நடித்திருக்கிறார். இப்படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றுவருகிறது.

இப்படம் இதுவரை ரூ.150 கோடிக்கும் அதிகமாக வசூல் வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்த நிலையில், 'கங்குவா' திரைப்படம் வருகிற 8ம் தேதி அமேசான் பிரைம் ஓ.டி.டி தளத்தில் வெளியாகுமென படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

முகமது ஷமி இந்திய அணிக்கு திரும்புவது எப்போது ? ரோகித் சர்மா விளக்கம்

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் பகல்இரவு போட்டியாக (பிங்க் பந்து டெஸ்ட்) அடிலெய்டில் நேற்று முன்தினம் தொடங்கியது.இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 180 ரன்களும், ஆஸ்திரேலியா 337 ரன்களும் அடித்தன. இதனையடுத்து 157 ரன்கள் பின்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 175 ரன்களில் ஆல் அவுட் ஆனது.இதன் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு 19 ரன்கள் மட்டுமே வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலியா 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 11 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது.ஆஸ்திரேலியாவின் இந்த வெற்றியில் பேட்டிங்கில் டிராவிஸ் ஹெட் (140 ரன்கள்) மற்றும் பந்துவீச்சில் (8 விக்கெட்டுகள்) ஸ்டார்க் முக்கிய பங்கு வகித்தனர்.

இந்த டெஸ்ட் தொடரில் இந்திய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது ஷமி இடம் பிடிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கடந்த ஒருநாள் உலகக்கோப்பை தொடரின் போது ஏற்பட்ட காயத்திலிருந்து முழுமையாக குணமடையாததால் அவரால் இடம் பெற முடியவில்லை.முகமது ஷமி இல்லாதது இந்திய அணிக்கு குறையாகவே இருந்து வருகிறது .

இந்த நிலையில், இந்திய அணிக்கு முகமது ஷமி எப்போது திரும்புவார் என்ற கேள்விக்கு ரோகித் சர்மா பதிலளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது,

முகமது ஷமி இங்கு வந்து விளையாடுவதற்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. . நாங்கள் ஷமியை உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறோம். நாங்கள் அவருக்கு அழுத்தம் கொடுக்க விரும்பவில்லை. என தெரிவித்தார்.

'மெய்யழகன்' படத்தை பார்த்து அழுத பிரபல பாலிவுட் நடிகர்

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் கார்த்தி. இவரின் 27வது படமாக உருவானது 'மெய்யழகன்'. இயக்குனர் பிரேம் குமார் இயக்கிய இப்படத்தில் கார்த்தியுடன் முதல் முறையாக அரவிந்த் சாமி நடித்திருந்தார். மேலும் ஸ்ரீதிவ்யா, ராஜ்கிரண், தேவதர்ஷினி, ஜெயபிரகாஷ் உள்ளிட்ட பலர் நடித்தனர்.

கார்த்தி மற்றும் அரவிந்த் சாமிக்கு இடையேயான உறவின் மகத்துவத்தைப் பேசும் படியாக உருவான இப்படம் கடந்த செப்டம்பர் மாதம் 27ந் தேதி திரையரங்குகளில் வெளியாகி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. பல்வேறு தரப்பினரும் இப்படத்திற்கு பாராட்டு தெரிவித்தனர்.

அந்த வகையில், தற்போது பிரபல பாலிவுட் நடிகர் அனுபம் கெர் மெய்யழகன் படத்தை பார்த்து சமூகவலைதளப்பக்கத்தில் பாராட்டி பதிவிட்டுள்ளார். அதில், 'மெய்யழகன் படத்தை பார்த்தேன். என்ன ஒரு அற்புதமான படம். அழகாக, எளிமையாக இருந்தது.

படம் என்னை நிறைய அழுக வைத்தது. என் நண்பர் அரவிந்த்சாமி மற்றும் கார்த்தி சிறப்பாக நடித்திருக்கின்றனர். படத்தின் ஒவ்வொரு துறையிலும் குழுவினர் சிறப்பாக செயல்பட்டுள்ளனர். குறிப்பாக இயக்குனர் பிரேம் குமார்' இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது நல்ல பார்மில் இருப்பதாக உணர்கிறேன் ஆட்டநாயகன் டிராவிஸ் ஹெட்

இந்திய கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் கவாஸ்கர் கோப்பை டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் பெர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 295 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2வது டெஸ்ட் பகல்இரவு போட்டியாக (பிங்க் பந்து டெஸ்ட்) அடிலெய்டில் நடைபெற்றது. இதில் முதல் இன்னிங்சில் முறையே இந்தியா 180 ரன்களும், ஆஸ்திரேலியா 337 ரன்களும் அடித்தன. இதனையடுத்து 157 ரன்கள் பின்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்தியா 175 ரன்களில் ஆல் அவுட் ஆனது.

இதன் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு 19 ரன்கள் மட்டுமே வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பின்னர் எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலியா 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 11 என்ற கணக்கில் சமன் செய்துள்ளது. இந்த ஆட்டத்தில் அபாரமாக ஆடிய டிராவிஸ் ஹெட் ஆட்ட நாயகன் விருது வென்றார். இதையடுத்து அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது, மீண்டும் ரன்கள் குவித்தது நன்றாக இருக்கிறது. கடந்த வாரத்திலிருந்து நாங்கள் தற்போது சிறந்த நிலைக்கு வந்தோம். தற்போது நல்ல பார்மில் இருப்பதாக உணர்கிறேன். எங்களுடைய அணியும் நன்றாக இருக்கிறது. எதுவும் கேரண்டியாக இருக்க முடியாது. ஆனால் எங்களுக்கு நல்ல வேகம் கிடைத்துள்ளது. அதே வேகத்துடன் நாங்கள் இத்தொடரில் முன்னோக்கி செல்ல வேண்டும்.

இரண்டாவது புதிய பந்தில் ரிஸ்க் எடுத்து விளையாடுவதற்கு நல்ல வாய்ப்பு இருந்ததாக நான் கருதினேன். அது நன்றாக வேலையும் செய்தது. சதம் அடித்த போது அப்படி கொண்டாடியது புதிதாக பிறந்த என்னுடைய மகனுக்கானது. அதே போல மில்லருக்கும் (முதல் மகன்) செய்தேன். எனது குடும்பம் இங்கே இருந்தது மிகவும் நன்றாக இருந்தது. இந்த வாரம் நன்றாக அமைந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

ராஜமவுலி, சந்தீப் ரெட்டி வங்கா படங்களில் நடிக்க விரும்பும் நந்தமுரி பாலகிருஷ்ணா



தெலுங்கு திரையுலகில் முன்னணி நடிகராக இருப்பவர் நந்தமுரி பாலகிருஷ்ணா. இவர் தெலுங்கு திரையுலகில் இதுவரை 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். கடந்த 2021ம் ஆண்டு போயபதி சீனு இயக்கத்தில் 'அகண்டா' என்ற படத்தில் நடித்திருந்தார். 2021ம் ஆண்டு அதிக வசூல் செய்த தெலுங்குப் படங்களில் ஒன்றாக அமைந்தது.

தற்போது, இதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. இது மட்டுமில்லாமல் தனது 109வது படமான டாக்கு மகாராஜ் படத்திலும் நந்தமுரி பாலகிருஷ்ணா நடித்து வருகிறார். இப்படம் அடுத்த மாதம் 12ம் தேதி வெளியாக இருக்கிறது.

மறுபுறம், நந்தமுரி பாலகிருஷ்ணா என்ற பெயரில் நிகழ்ச்சி ஒன்றையும் அவர் நடத்தி வருகிறார். அதில், பிரபல இயக்குனர்களான ராஜமவுலி மற்றும் சந்தீப் ரெட்டி வங்கா ஆகியோரின் படங்களில் நடிக்க விருப்பம் தெரிவித்திருக்கிறார். இது குறித்து அவர் கூறுகையில்,

'ஒரு வேளை வாய்ப்பு கிடைத்தால், ராஜமவுலி படத்தில் ஹீரோவாகவும், சந்தீப் ரெட்டி வாங்காவின் இயக்கத்தில் வில்லனாகவும் நடிக்க விரும்புகிறேன்' என்றார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.